செ.வெ.எண்:31 நாள்:24.04.2017

# அரியலூரில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.04.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கட்கிழமை **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (24.04.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **1910** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், **மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து** அரியலூர் மாவட்டம், கச்சி பெருமாள் கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் அமுதா க/பெ.குப்புசாமி மற்றும் சாந்தி க/பெ.இராதாகிருஷ்ணன் ஆகியோர் இறந்ததிற்கு அவர்களின் வாரிசுதாரருக்கு தலா ரூ.50,000/- வீதம் **ரூ.1 இலட்சமும்,** கருப்பில்லாக்கட்டை மதுரா, கல்லகுடி கிராமத்தைச் சேர்ந்த ஜெய்பிரகாஷ் த/பெ.ஜெயபால் என்பவர் ஏரியில் தவறி விழுந்து இறந்ததற்கு அவரின் வாரிசுதாரருக்கு **ரூ.15,000/-மும்** ஆகமொத்தம் 3 நபர்களுக்கு **ரூ.1 இலட்சத்து 15 ஆயிரம்** மதிப்பில் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து விபத்து நிராரண நிதிக்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தனசேகரன், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) திரு.பாலாஜி, மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.